# அறுவடை செய்த எள்ளை உடனடியாக விற்கவும் (01.04.2015)

இந்தியாவில், மேற்கு வங்க மாநிலம் நாட்டின் எள் உற்பத்தியில் 40 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ளது. இதை தொடர்ந்து மத்திய பிரதேசம், இராஜஸ்தான், மற்றும் குஜராத் மாநிலங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேற்கண்ட நான்கு மாநிலங்களும் நாட்டின் எள் உற்பத்தியில் 70 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ளது. இதர பங்களிப்பை தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் உத்திர பிரதேசம் மாநிலங்கள் அளிக்கின்றன.

தமிழ்நாட்டில், ஈரோடு மாவட்டம் எள் உற்பத்தியில் முன்னணி வகிக்கிறது. மேலும் கரூர், தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்கள் மாநில எள் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில், எள் சாகுபடி பாசன பயிராக டிசம்பர் - ஜனவரி மாதங்களில் பயிரிடப்பட்டு தொடர்ந்து வரும் மார்ச் - மே மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. கடந்த தைப்பட்டத்தில், ஈரோடு மாவட்டத்தில் சாகுபடி பரப்பு கடந்த வருடத்தை காட்டிலும் 400 எக்டர் அதிகரித்து காணப்படுகிறது (2013 -14ல் 1608 எக்டர்; 2014 -15ல் 2016 எக்டர்).

ஏற்றுமதி சந்தையை பொருத்தமட்டில், சீனா தனக்கு தேவையான எள்ளை ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து நல்ல தரத்துடன் இந்தியாவை காட்டிலும், குறைந்த விலையில் இறக்குமதி செய்கின்றன. தமிழ்நாட்டில் எண்ணெய் உற்பத்தியாளர்கள் மேற்கு வங்க மாநிலத்திலிருந்து நடப்பு உள்ளூர் விலையை விட குறைந்த விலைக்கு தருவிக்கின்றனர். தற்சமயம் சிவப்பு எள், சிவகிரி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் குவிண்டாலுக்கு ரூபாய் 6800 – 8000 வரை விற்பனை செய்யப்படுகிறது.

மேற்கண்டவற்றை கருத்தில் கொண்டு ஏப்ரல் - மே 2015ல் அறுவடைக்கு வரும் எள்ளின் உத்தேச விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் 15 வருட விலைகளை ஆய்வு செய்து, வர்த்தக ஆய்வுகளை மேற்கொண்டது.

ஆய்வுகளின் முடிவில், ஏப்ரல் - மே 2015ல் அறுவடைக்கு வரும் தரமான சிவப்பு எள்ளின் விலை குவிண்டாலுக்கு 7500 – 7700 வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், விலை அதிகரிக்க குறைவான வாய்ப்பு காணப்படுகிறது. இதன் அடிப்படையில் விவசாயிகள் மேற்கண்ட மாதங்களில், தாங்கள் அறுவடை செய்த எள்ளை உடனடியாக விற்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி -0422-2431405

**மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
எண்ணெய் வித்துக்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003.
தொலைபேசி எண் - 0422-2450812